(ஆ) திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஏழு பேருக்கு வழங்கப்பட்ட தண்டனையை திரும்பப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் இல்லாமல், வாக்கெடுப்பு இல்லாமல், நிறைவேற்ற வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இப்பொழுது என்னுடைய ஒரு வேண்டுகோளை இந்தப் பேரவைக்கு வைக்கிறேன். பேரவையின் அனுமதியோடு ஒரு கருத்து. 18-2-2017 அன்று நடைபெற்ற சம்பவங்களின்போது தி.மு.க. உறுப்பினர்கள் சிலர் நடந்துகொண்ட விதம், பேரவையின் ஒட்டுமொத்த உரிமையைப் பாதிப்பதாகத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல் அவர்கள் ஓர் உரிமை மீறல் பிரச்சினை குறித்து அறிவிப்பினைக் கொடுத்தார்கள். இந்தப் பிரச்சினை குறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக நானாகவே அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பினேன். வருங்காலத்தில் சுதந்திரமான முறையில், நாட்டு மக்களின் நன்மைக்காக, பேரவை விதிகளுக்கு உட்பட்டு, கண்ணியமான முறையில், எந்தவித அச்சுறுத்தலும் இன்றி, உறுப்பினர்கள் பேரவையில் தமது கருத்துகளை வெளிப்படுத்த ஏதுவாகவும், பேரவையில் சட்டமன்றப் பேரவைத் தலைவரின் ஜனநாயகக் கடமைகளை வன்முறை மூலமும், அச்சுறுத்தல் மூலமும், அடாவடி நடவடிக்கைகள் மூலமாகவும் தடுத்துவிட முடியும் என்ற தவறான எண்ணத்தை விதைக்கக்கூடிய உறுப்பினர்களின் செயல்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலும், பிற உறுப்பினர்களுக்கு இது ஒரு பாடமாக அமைய வேண்டும் என்ற வகையிலும், குற்றத்தின் தன்மையைக் கருத்தில்கொண்டும், அவை நடவடிக்கைகளுக்குப் பெரிதும் குந்தகம் விளைவித்த தி.மு.க. உறுப்பினர்கள், திரு. எஸ். அம்பேத்குமார், திரு. கே.எஸ். மஸ்தான், திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், திரு. என். சுரேஷ் ராஜன், திரு. க. கார்த்திகேயன், திரு. பி. முருகன் மற்றும் திரு. கு.க. செல்வம் ஆகியோரை ஆறு மாத காலத்திற்கு அவை நடவடிக்கைகளிலிருந்து நீக்கி வைக்க வேண்டுமென்றும், இக்காலத்தில், மேற்கூறிய சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஊதியத்தையும், பிற ஆதாயங்களையும், சலுகைகளையும், தகுதிகளையும் பெற இயலாதவகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவை உரிமைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

2017 ஜூன் 23] [பேரவைத் தலைவர்]

பிற்பகல் 12-10

அந்தப் பரிந்துரைகள் நிறைவேற்றப் பெற வேண்டும் என்று இப்பேரவையின் சார்பாக நம்முடைய மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இத்தீர்மானத்தை முன்மொழிந்துள்ளார்கள். தீர்மானத்தை வாக்கெடுப்பிற்கு விடுவதற்கு முன்னால், இந்தப் பிரச்சினையில் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டவன் நான் என்ற முறையில், நான் சில கருத்துகளை, கருத்துகள் என்று சொல்ல மாட்டேன். ஒரு வேண்டுகோளை பேரவையின்முன் வைக்க விரும்புகிறேன். பேரவைத் தலைவர் என்ற முறையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று அனைத்து உறுப்பினர்களும் என்னிடத்திலே கோரிக்கை வைக்கிறீர்கள். ஆனால், இன்றைக்கு நான் உங்கள் அனைவரிடத்திலேயும் ஒரு கோரிக்கை வைக்க விரும்புகிறேன். ‘அவை உறுப்பினர்களுக்கு பேரவைத் தலைவரே பாதுகாப்பு. பேரவைத் தலைவருக்கு இந்தப் பேரவையே பாதுகாப்பு’ என்ற முறையில், எனக்கு ஏற்பட்ட நிகழ்வை, தன்னுடையதாக ஏற்றுக்கொண்டு, இந்தப் பேரவை நடவடிக்கை எடுக்க முனைந்ததற்கு என்னுடைய நன்றியை முதற்கண் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 7 தி.மு.க. உறுப்பினர்களும் கடந்த 21-6-2017 அன்று என்னை நேரிலே சந்தித்து, நடந்த சம்பவங்களுக்கு வருத்தம் தெரிவிக்கும் கடிதத்தை அளித்து, மன்னிப்பையும் கோரியுள்ளார்கள். வருங்காலங்களில் இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபட மாட்டோம் என்ற உறுதியையும் தெரிவித்திருக்கிறார்கள். பேரவையினுடைய உரிமையைப் பாதிக்கக்கூடிய அளவில் 18-2-2017 அன்று பல்வேறு விரும்பத்தகாத நிகழ்வுகள் தி.மு.க. உறுப்பினர்களால் அரங்கேற்றப்பட்டதைச் சுட்டிக்காட்டி, மேலும், 7 தி.மு.க. உறுப்பினர்களும் அவை உரிமை மீறல் செயலைச் செய்துள்ளதையும், அதற்கான தண்டனைக்கு ஆளாக்கப்பட்டுள்ளதையும் உரிமைக் குழு தனது அறிக்கையிலே எடுத்துக்காட்டி, அதனைத் தண்டனையாகப் பரிந்துரை செய்துள்ளது. அதனை பேரவையும் ஏற்றுக்கொண்டு நிறைவேற்ற முன்வந்துள்ளபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்களைத் தவிர, ஏனைய உறுப்பினர்கள் இப்பேரவைக்குப் புதியவர்கள் என்ற காரணத்தினாலும், மேற்காணும் 7 உறுப்பினர்களும் நேரிலே வருத்தம் தெரிவித்து கடிதம் அளித்தும், மன்னிப்புக் கோரியும், எதிர்காலத்திலே இதுபோன்ற நிகழ்வுகளில் ஈடுபட மாட்டோம் என்று உறுதி

கூறியுள்ளதை ஏற்றுக்கொண்டு, இதுமாதிரி எதிர்காலத்திலே அவர்கள் நடந்துகொள்ள மாட்டார்கள் என்ற எதிர்பார்ப்போடும், பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை பேரவையின் அனுமதியோடு, திரும்பப் பெற்றுக்கொண்டு, அவை உரிமை மீறல் செயலைச் செய்த அந்த 7 உறுப்பினர்களையும் எச்சரித்து, பிரச்சினையை இத்தோடு விட்டுவிடலாம் என்று நான் கருதுகிறேன். இதனை இந்தப் பேரவை தயவுசெய்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் வேண்டுகோள் என்று சொல்லக்கூடாது. உங்கள் உத்தரவு என்றே நாங்கள் கருதுகிறோம். நாங்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை திரும்பப் பெற்றுக்கொள்கிறோம். இருப்பினும், ஒன்றை உங்களிடத்திலே குறிப்பிட விரும்புகிறேன். நீங்கள், புரட்சித் தலைவர் அவர்களுடைய வழியிலே வந்தவர்; புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலே வந்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி ஓர் அரசு நடைபெற வேண்டும் என்பதை ஆய்ந்து அறிந்தவர். தாங்கள் அமைச்சராக இருந்தபோதும், பேரவைத் தலைவராக இருந்தபோதும் அம்மா அவர்களால் பாராட்டப்பெற்றவர் என்பதை நாங்கள் அறிவோம். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய பண்பாடுகள், உங்களுடைய மனிதநேயம், உங்களுடைய இரக்கம் ஆகியவற்றை நாங்கள் அத்தனை பேரும் அறிந்திருக்கிறோம். அப்படிப்பட்ட சிறந்த பேரவைத் தலைவராக நீங்கள் இன்றைக்கு இந்த அரியணையிலே அமர்ந்து கொண்டிருக்கிறீர்கள். எங்கள் வாழ்த்துகளையும், நன்றியையும் முதலிலே தெரிவித்துக்கொள்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய வேண்டுகோளை அல்ல, உங்கள் உத்தரவை ஏற்று, தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களின் உத்தரவின்பேரில் பேரவையின் அனுமதியோடு, “மேற்படி அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளில் குறிப்பிட்டுள்ள தண்டனைக்குப் பதிலாக, அவை உரிமை மீறல் தவறு செய்த 7 தி.மு.க. உறுப்பினர்களை எச்சரித்து பிரச்சினையை இத்தோடு விட்டுவிடலாம் என்ற திருத்தங்களைச் செய்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஈ)-ன்கீழ் இப்பேரவை ஏற்றுக்கொள்கிறது”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

2017 ஜூன் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே 'இல்லை' என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

பிற்பகல் 12-15

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை அடிப்படையாக வைத்து, அதை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்து, உரிமைக் குழுவிலே ஒரு முடிவெடுக்கப்பட்டு, அந்த முடிவினை நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே முன்மொழிந்தார்கள்.

அவை உரிமைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட தண்டனையைப் பொறுத்தவரையில், பேரவைத் தலைவராக இருக்கக்கூடிய நீங்கள் ஒரு வேண்டுகோளாக இந்த அவையிலே சுட்டிக்காட்டி, அப்படிப்பட்ட தண்டனை தேவையில்லை; ஓர் எச்சரிக்கையாகவே இருந்துவிட வேண்டுமென்று ஒரு பெருந்தன்மையோடு இங்கே அறிவித்திருக்கிறீர்கள். அதற்குப்பிறகு மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை, அவரே திரும்பப் பெற்றுக்கொண்டு, அதற்குப்பிறகு, எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டிய அவசியமில்லை என்ற மற்றொரு தீர்மானத்தையும் கொண்டு வந்து நிறைவேற்றித் தந்திருக்கிறீர்கள். அதற்காக, நான் முதலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்தப் பேரவைக்கும், குறிப்பாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, அவை உரிமைக் குழுவின் பரிந்துரை குறித்து நீங்கள் முடிவெடுத்து, தீர்ப்பும் வழங்கிய பிறகு, அதுகுறித்து விவாதிப்பதற்கு நிச்சயமாக எனக்கு எந்த உரிமையும் கிடையாது

என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, அந்தச் சம்பவம் நடைபெற்ற நேரத்தில் தெரிந்தோ, தெரியாமலோ எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள் ஏதாவது தவறு செய்திருந்தால் அதற்காக வருத்தத்தையும், மன்னிப்பையும் நான் அப்போதே தெரிவித்தேன். அதுமட்டுமல்ல, தாங்கள் தங்களுடைய அறைக்கு அழைத்து. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் அறையில் வந்து பேசியதையெல்லாம் இங்கே குறிப்பிட வேண்டாம்.

திரு. மு.க. ஸ்டாலின்: இதுகுறித்து விவாதிக்கும்போது அங்கேயும் நான் சொன்னேன். எனவே, அந்த நிலையில்தான் இப்போது நீங்கள் தெரிவித்த கருத்துகளை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, நீங்கள் அறிவித்திருக்கக்கூடிய அறிவிப்பிற்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18-2-2017 அன்று நடந்த நிகழ்வுகள் குறித்து, அவை உரிமைக் குழு ஒரு பரிந்துரையை அவைக்குத் தந்திருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மிகப் பெருந்தன்மையுடன் அந்த முடிவை மறுபரிசீலனை செய்து, அந்த உறுப்பினர்கள்மீது எந்தவிதமான நடவடிக்கையும் தேவையில்லை என்ற ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே அந்தத் தீர்மானத்தை திரும்பப் பெற்றிருக்கிறார்கள். அதற்காக, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்றத்தைப் பொறுத்தமட்டில், மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இரண்டு தரப்புகளையும், இதேபோல இணக்கமான முடிவிலே கொண்டு சென்று சட்டமன்றத்தை நடத்துவதற்கு உறுதுணையாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இங்கே இருக்கக்கூடிய மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும்

2017 ஜூன் 23] [திரு. கரி. இராமசாமி]

நாம் முன்மாதிரியான சட்டமன்ற உறுப்பினர்களாக நடக்க வேண்டும், தமிழகம்தான் முதன்மை மாநிலம் என்று அடிக்கடி சொல்கிறோம். இந்த வகையிலும், முதன்மையான மாநிலமாக இருக்க வேண்டுமென்று சொல்லி, இதற்கு உதவியாக இருந்த அனைவருக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

பிற்பகல் 12-20

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றத்தில் 18-2-2017 அன்று நடைபெற்ற சம்பவங்களையொட்டி அவை உரிமைக் குழுவால் இயற்றப்பெற்ற தீர்மானத்தை மிக்க பெருந்தன்மையோடு, அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தைத் திரும்பப் பெற்று, தொடர்ந்து அனைத்து உறுப்பினர்களும் ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே நீங்கள் செயல்பட்டிருக்கிறீர்கள். உங்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும், ஒத்துழைத்த அனைத்து உறுப்பினர்களுக்கும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முஸ்லிம் சமுதாயத்தினைப் பொறுத்தவரை இன்று 27 நாட்கள் நோன்பு முடித்து லைலத்துல் கத்ர் என்று சொல்லக்கூடிய கண்ணியமான ஓர் இரவை நாங்கள் கடந்திருக்கின்றோம். அதுபோல், தமிழக சட்டப் பேரவை வரலாற்றிலே இதை ஒரு கண்ணியமான நாளாகவே நான் கருதி, இந்த நாள் எல்லா காலங்களிலும் தொடர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பெருந்தன்மையோடு நடந்த அவைத் தலைவராகிய உங்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொண்டு, இதுபோன்ற ஒரு சுமுகமான சூழ்நிலை தமிழக சட்டப் பேரவையில் தொடர வேண்டும் என்பதையும் தெரிவித்து, நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் வழங்கிய தீர்ப்பு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு என்றுதான் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) பாதிக்கப்பட்டது நீங்கள். பெருந்தன்மையோடு இன்றையதினம் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கின்றீர்கள். அதைத்தான் நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும்கூட, ஒரு சட்டமன்றம் ஜனநாயக முறைப்படி நடக்க வேண்டும் என்பதை எடுத்துரைத்திருக்கின்றார்கள். அதில் எனக்கு மாற்றுக் கருத்தும் இல்லை. நான் அதற்குள் செல்லவும் விரும்பவில்லை.*

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைப் பொறுத்தவரை இந்தச் சட்டமன்றம் ஜனநாயகத்தோடு நடக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் இன்றையதினம் நடைபெறுகின்ற நிகழ்வு என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் என்ன சொல்கிறீர்களோ அதுதான் இந்தச் சட்டமன்றத்தில் நடக்கின்றது. அதுபோல் பேசுகின்ற உறுப்பினர்களுக்கு நீங்கள் கொடுக்கின்ற வாய்ப்பாக இருந்தாலும் சரி, அதுபோல் அமைச்சர் பெருமக்கள் பதில் சொல்வதற்கு நீங்கள் கொடுக்கின்ற வாய்ப்பு என்பதும் உங்களுடைய தனிப்பட்ட உரிமை. அதில் நான் உள்ளே செல்லவில்லை. ஆனால், அதே நேரத்தில் எங்களுடைய அரசு எந்த அளவிற்கு ஜனநாயகத்தோடு நடந்துகொண்டிருக்கின்றதோ, அந்த அளவில் நீங்களும் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே ஒரு கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்றையதினம் சொன்னதை முழுமையாக நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில் இன்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், திரு. சேகர்பாபு அவர்களும் பேசினார்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கின்றார். ஒரு கேள்வி கேட்கும்போது அரசினுடைய நிதிநிலைக்கேற்பதான் பதில் சொல்ல முடியும். கேள்வி நேரத்தில் குறுக்கிடக்கூடாது என்பதால்தான் நான் இப்போது அதைப் பேசுகின்ற நிலைமையில் இருக்கின்றேன். அமைச்சர்களிடம் கொடுப்பீர்களா, இல்லையா என்று கட்டாயப்படுத்துகின்ற நிலைமையை உருவாக்குகின்றபோது, ஒவ்வொரு முறையும் சபையில் எங்களுடைய உரிமையை அவர் எடுத்துக்கொள்வதைப்போல இருக்கின்றது. அதைப்போல திரு. சேகர்பாபு அவர்கள் பேசுகின்றபோது, ‘அவர் கையில் பதில் இல்லை’ என்று சொல்கிறார். ஆரோக்கியமான விவாதமாக இருக்கின்ற காரணத்தினால் நான் உள்ளே செல்ல விரும்பவில்லை.

2017 ஜூன் 23] [திரு. பி. தங்கமணி]

நான் இப்போது சொல்கிறேன். ஒரு நாள் முழுவதும் மின்சார வாரியம் குறித்து நீங்கள் விவாதம் வைக்க வேண்டும் என்று சொன்னால்கூட நான் தயாராக இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்பற்றி நான் சொல்லவில்லை. எங்களைப் பொறுத்தவரை, நீங்கள் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில்கூட உள்ளாட்சித் துறைக்கு இரண்டு நாட்கள் விவாதம் வேண்டும் என்று கேட்டீர்கள். காவல் துறைக்கு இரண்டு நாட்கள் வேண்டும் என்று கேட்டீர்கள். அதுபோல் நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித் துறைக்கு ஒரு நாள் முழுவதும் வேண்டும் என்று கேட்டீர்கள். அனைத்திற்கும் நாங்கள் ஒத்துக்கொண்டு, இந்தச் சட்டமன்றம் சிறப்பாக நடக்க வேண்டும், இந்த சட்டமன்றத்தில் ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் நாங்கள் அந்த அளவிற்கு இறங்கிப் போகிறோம். ஆனால், ஒருசில சமயத்தில் எல்லைமீறிப் போகின்றபோது இங்கிருக்கின்ற பத்திரிகை நண்பர்களாக இருந்தாலும்சரி, எங்களுக்குப் பின்னால் அமர்ந்து இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, எதற்கெடுத்தாலும் அமைச்சர்கள் அமைதியாகச் சென்று விடுகிறார்கள் என்கின்ற ஓர் எண்ணத்தை உருவாக்குகின்ற வகையில் இதுபோன்ற செயல்கள் இருக்கக்கூடாது என்பது எனது தாழ்மையான வேண்டுகோள். அதுவும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் சொல்கிறேன், ஏனென்றால் அவர்களது side-ல் ஏதாவது பிரச்சினை என்றால் அமைதிப்படுத்திக்கொண்டு சென்று கொண்டிருக்கின்றார். கடந்த ஒரு வாரகாலமாக இந்தச் சட்டமன்றம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. இதேபோன்று இனிமேலும் நடைபெற வேண்டும். மின்சாரத் துறை மானியக்கோரிக்கையின்போது திரு. ஆஸ்டின் அவர்கள் பேசும்போது, ‘அவருக்கு இன்னும் நேரம் கொடுங்கள், எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை’ என்று நான் உங்களிடத்தில்கூட சொன்னேன். அந்த அளவிற்கு ஜனநாயகத்தோடு செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்தச் சட்டமன்றத்தை நாங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

பிற்பகல் 12-25

ஆக, இந்தச் சட்டமன்றத்தினுடைய ஜனநாயகத்தை, ஆளும் தரப்பும் சரி, எதிர் தரப்பும் சரி முழுமையாக மதித்து, இனி வர இருக்கின்ற காலத்தில் செயல்பட வேண்டும். நம்முடைய சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு முன்னுதாரணமான நடவடிக்கையை எடுத்திருக்கின்ற

காரணத்தினால், இனிமேல் சட்டமன்றத்தில் உங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லாமல், சட்டமன்றப் பேரவைத் தலைவர் எந்த அளவிற்குப் பெருந்தன்மையோடு நடந்துகொண்டீர்களோ அந்தப் பெருந்தன்மையோடு நாங்கள் எங்கள் தரப்பிலும் நடந்துகொள்வோம் என்ற உறுதியை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் கொடுப்பார் என்று சொன்னால் இந்தச் சட்டமன்றம் சுமுகமாகச் செல்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அனைவருக்கும் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எங்களுடைய இயக்கத்தின் சார்பாகவும், எங்களுடைய அரசின் சார்பாகவும் நன்றி கூறி விடைபெறுகிறேன். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவ்வப்பொழுது எழுந்து நின்று ஏதாவது தமாஷ் செய்து கொண்டிருப்பார். அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், விளையாட்டு வினையாகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் உங்களிடம் கூறுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை விட்டு விடுங்கள். அவர் உங்களைப்பற்றி நன்றாகத்தான் சொல்லியிருக்கிறார்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதையும் குறுக்கிட விரும்பவில்லை. குறிப்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீது எனக்குத் தனிப்பட்ட முறையில் மரியாதை உண்டு. ஆனால், இன்றைக்குக் கேள்வி நேரத்தில் நான் அமைச்சரிடம் கேட்டது, அந்த கேள்விக்குரிய பதிலைத் தர வேண்டும் என்று சொன்னேனே தவிர, அமைச்சர்களை வற்புறுத்த வேண்டும் என்பதல்ல. நான் நேற்றைக்கே சொன்னேன். எனக்கு எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்பதல்ல. யார் நல்ல பேச்சு பேசினாலும், prepare செய்து வந்து பேசுகிற அமைச்சர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதில் நீங்கள் முதல் ஆளாக இருக்கிறீர்கள். அதில் எனக்கு மாறுபட்ட கருத்து எதுவும் இல்லை. (சிரிப்பு) எனவே, யார் செய்தாலும் சரி. நல்லது செய்வதை பாராட்டவில்லையென்றால் அவன் மனிதனே கிடையாது. ஆகையால் எனக்கு அந்த மனப்பான்மை உண்டு. நேற்றுகூட திரு. இன்பதுரை அவர்கள் பேசினார். அவர் பேசியது பிடிக்கவில்லை, எனக்கு கருத்து வேறுபாடு உண்டு. But, I like him. அவருடைய way of approach-ஐ நான் பாராட்டுகிறேன். யாராக இருந்தால் என்ன? நான் நீண்ட காலமாக இந்த அவையில்

உறுப்பினராக இருந்து வந்துள்ளேன். இன்னும் சொல்லப்போனால், நான் இப்பொழுதெல்லாம் பேசுவதே இல்லை. (சிரிப்பு) ஐயா, நான் பேசி இரண்டு வருடங்கள் ஆகின்றன. என்னுடைய வாதம் எப்படி இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகையால், நான் பேசுவது இல்லை. மற்றவர்கள் பேச வேண்டும் என்பதிலே விருப்பமுடையவன். மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கமணி அவர்கள் என்னை pin பண்ணக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். இருந்தாலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இன்றைக்கு எடுத்திருக்கிற முடிவிற்கு என்னுடைய பாராட்டையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, நன்றி. இன்றைக்கு இந்த அவையிலே ஆளும் தரப்பிலும், எதிர்க்கட்சித் தரப்பிலும் நல்ல ஆரோக்கியமான கருத்து விவாதங்கள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. நான் ஒரு சின்ன முயற்சி எடுத்திருக்கிறேன். அந்த முயற்சிக்கு நீங்கள் எல்லாம் ஒத்துழைத்து, இந்த அவையை நல்ல முறையிலே சுமுகமாக நடத்தி, எதிர்காலத்தில் இந்திய துணைக் கண்டத்திலேயே நம்முடைய தமிழக சட்டமன்றம் ஓர் ஆரோக்கியமான விவாத மன்றம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நடக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) என்னை ஆளாக்கிவிட்டுச் சென்றிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது முறை சட்டமன்றப் பேரவைத் தலைவராக அமர்த்தியபோதும் என்னிடத்திலே அவர் வைத்த கோரிக்கை 'நீங்கள் ஆரோக்கியமாக இந்த மன்றத்தை நடத்த வேண்டும். எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்று இல்லாமல் அனைவருக்கும் சமமாக இருந்து ஓர் ஆரோக்கியமான மன்றமாக அனைவருக்கும் நல்ல விவாதங்கள் செய்கிற வாய்ப்புகளைக் கொடுத்து மன்றத்தை நடத்த வேண்டும்' என்று சொல்லியிருக்கிறார்கள். மறைந்த என்னுடைய தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வார்த்தையை நிச்சயம் நான் காப்பாற்றுவேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஒரு சிறிய முயற்சி எடுத்திருக்கிறேன். அந்த முயற்சிக்கு ஆளும் தரப்பும், எதிர் தரப்பும் ஒத்துழைப்பு கொடுத்து நல்ல முறையிலே இந்த அவையை நடத்தி, இந்தியத் துணைக் கண்டத்திலே நம்முடைய சட்டப் பேரவை சிறந்த மன்றம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நாம் உருவாக்குவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு, அனைவருக்கும், ஒத்துழைத்த அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.